ஆய்வுச்சுடர்: பன்னாட்டு பன்முகத்தமிழ் மின்-ஆய்விதழ் ISSN NO.2581-5938
ANJAC, SIVAKASI, TAMILNADU, INDIA மலர்-4, இதழ்-1, சனவரி 2021

# தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைகள் : வைதிக, அவைதிக மீக்கோட்பாட்டியல் நோக்கு

**மா. பரமசிவன்**

உதவிப்பேராசிரியர், தமிழ்மொழி இலக்கியத்துறை,
அருள் ஆனந்தர் கல்லூரி(தன்னாட்சி), கருமாத்தூர் - 625 514, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.

---

பழந்தமிழ் நூல்களின் மீட்சிக் காலமாகக் கருதப்பெறும் இடைக்காலத்தில் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்திற்கு உரை எழுதியவர்களாக இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் திகழ்கின்றனர். இவ்விருவரின் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைகளை மீக்கோட்பாட்டியல் நோக்கில் ஆராய்வதாக இந்த எழுத்துரை அமைகிறது.

**வைதிகம் X அவைதிகச் சிந்தனைக் கருத்தியல் = சிறப்புப்பாயிர உரை**

தொல்காப்பியத்திற்கு முதற்கண் உரை எழுதிய இளம்பூரணர், தொல்காப்பியப் பனுவலைத் தெளிவுபடுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்தி உரை எழுதுகிறார். அவரைத் தொடர்ந்து உரை எழுதிய சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் இத்தன்மையில் சிறந்து விளங்கினாலும் தம் சமயம்சார் சிந்தனைகளை உரையிடையே பதிவுசெய்வதிலும் கவனம் செலுத்தியதுபோல் தோன்றுகிறது. எந்தெந்த இடங்களில் தாம் சார்ந்திருந்த வைதிக சமயச் சிந்தனைக் கருத்துகளைப் பதிவுசெய்ய இயலுமோ அந்தந்த இடங்களிலெல்லாம் தம் சமயச் சிந்தனைக் கருத்துகளைப் பதிவு செய்கின்றனர். இவர்களுள், சிறப்புப் பாயிரத்திற்கு உரை எழுதியவராக நச்சினார்க்கினியர் திகழ்கிறார். அவர், சிறப்புப் பாயிர உரையிலேயே தமது சமய அடையாளச் சிந்தனைக் கருத்தியலைப் பதிவு செய்யத் தொடங்கிவிடுகிறார். இந்நிலையில், தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையில் வெளிப்படுகின்ற வைதிக, அவைதிகச் சிந்தனைக் கருத்தியலைப் பின்வருமாறு பகுத்து விளக்கலாம். அவை:

1. வேதம் தொடர்பான கருத்து
2. திசைக் கருத்தியல்
3. நல்லாசிரியரும் உயர்ந்தோரும்
4. வீடுபேற்றுச் சிந்தனை மரபு வெளிப்பாடு
5. முந்துநூல் கருத்துகள்
6. புராணக்கதை மீள்நினைவூட்டல்
7. வைதிகப் புனைவுக்கதை உருவாக்குதல்.

**வேதம் தொடர்பான கருத்து**

வைதிகச் சிந்தனை மரபுடையோர் தம்முடைய பனுவலில் வேதம் தொடர்பான கருத்தியலைப் பதிவு செய்வதில் கவனம் செலுத்தியதான பதிவுகள் தமிழ் நூல்கள் முழுவதும் பரவலாகக் காணக்கிடைக்கின்றன. நச்சினார்க்கினியர், சீவக சிந்தாமணி எனும் சமண நூலுக்கு உரை செய்தவராக இருந்தாலும் தொல்காப்பிய உரையில் வாய்ப்பிருக்கும் போதேல்லாம் வேதம் தொடர்பான பதிவுகளைக் குறிக்கிறார். வேதச்சிந்தனை மரபு வைதிக மரபிற்கு ஆணிவேர் போன்றதாகும். அதனால்தான், வைதிகர்கள் வேதச்சிந்தனை மரபை உயர்த்துவதில் கவனம் செலுத்துகின்றனர். இதனை நச்சினார்க்கினியர் தம் சிறப்புப்பாயிர உரையிலும் வெளிப்படுத்துகிறார். தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் வரும்,

*அறங்கரை நாவின் நான்மறை முற்றிய*

*(தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம், 10)*

எனும் அடியில் வரும் *நான்மறை* என்பதற்கு இளம்பூரணர்,

*மெய்சொல்லும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்றவுணர்ந்த*

என்று உரை எழுதுகிறார். நச்சினார்க்கினியர்,

*அறமே கூறும் நாவினையுடைய நான்கு வேதத்தினையும் முற்ற அறிந்த*

என்று உரை எழுதி,

*நான்கு கூறுமாய் மறைந்த பொருளும் உடைமையான் 'நான்மறை'யென்றார். அவை தைத்திரியமும் பௌடிகமுந் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி இருக்கும் யசுவும் சாமமும் அதர்வணமுமென்பாருமுளர். அது பொருந்தாது; இவர் இந்நூல் செய்த பின்னர் வேதவியாதர் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினோர் உணர்தற்கு நான்கு கூறாக இவற்றைச் செய்தராதலின்*

என்று விளக்கம் அளிக்கிறார்.

நச்சினார்க்கினியர், *நான்மறை முற்றிய* என்ற சிறப்புப்பாயிர அடியைக்கொண்டு, நான்கு வேதங்கள் எவை என்பது குறித்த கருத்தாடலை நிகழ்த்துகிறார். தைந்திரியம் முதலானவற்றைத் தான் பாயிரம் கூறுகிறது என்றும் இருக்கு முதலானவை தொல்காப்பியத்திற்குப் பின்னர் தோன்றியவை என்றும் கூறுவது இவரின் வேதப்புலமையைத் தெளிவுபடுத்துவதாகும். இருப்பினும், தொல்காப்பியப் பாயிரக் கருத்தான நான்மறை முற்றிய என்பதற்கு எட்டு வேதங்களைப் பதிவு செய்து தமது வைதிகக்

கருத்தியலையும் புலமையையும் நச்சினார்க்கினியர் புலப்படுத்திவிடுகிறார். இவ்விளக்கமானது, அவரின் வைதிகச் சிந்தனைக் கருத்தியலைப் பதிவு செய்வதாக அமைகிறது. வைதிகர்கள் தவிர்த்த பிறர் வேதத்தை நினைத்துக்கூடப் பார்க்க முடியாத இடைக்காலச் சூழலைக் கவனத்தில் கொள்ளும்போது இதன் வலிமை கூடுதலாகப் புலப்படும். மேலும், இளம்பூரணர் நான்மறை பற்றிய இவ்வடிக்குப் பொருளை மட்டும் குறித்துச்செல்ல, நச்சினார்க்கினியர் தைத்திரியம் முதலான நான்கு வேதங்களின் பெயர்களைக் குறித்திருப்பதும் வைதிகப் பரவலாக்கக் கருத்தாகக் கருதத்தக்கதாகும்.

**திசைக் கருத்தியல்**

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம்,

*வடவேங்கடந் தென்குமரி*
*ஆயிடைத்*
*தமிழ்கூறு நல்லுலகத்து*

*(தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம், 1-3)*

என்று தொடங்குகிறது. இதற்கு விளக்கமளிக்கும் இளம்பூரணர்,

*மங்கலதிசையாகலின், வடக்கு முன் கூறப்பட்டது. கடல் கொள்வதன் முன்பு பிறநாடும் உண்மையின், தெற்கும் எல்லை கூறப்பட்டது. கிழக்கும் மேற்கும் பிறநாடு இன்மையின், கூறப்படாவாயின. பிற இரண்டெல்லை கூறாது இம்மலையும் ஆறும் கூறியது, அவை தீர்த்தமாதலானும் கேடிலவாதலானும் எல்லாரானும் அறியப்படுதலானுமென்பது. இவை அகப்பாட்டெல்லை.*

என்று விளக்கம் எழுதுகிறார். நச்சினார்க்கினியர்,

*இனி மங்கல மரபின் காரியஞ்செய்வார் வடக்குங் கிழக்கும் நோக்கியுஞ் சிந்தித்தும் நற்கருமங்கள் செய்வாராதலின் மங்கலமாகிய வடதிசையை முற்கூறினார்; இந்நூல் நின்று நிலவுதல் வேண்டி. தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார் தெற்கும் மேற்கும் நோக்கியுங் கருமங்கள் செய்வராதலின் தென்றிசையைப் பிற்கூறினார். நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகத் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும் எல்லாரானும் அறியப்படுதலாலும் வேங்கடத்தை எல்லையாகக் கூறினார். குமரியுந் தீர்த்தமாலின் எல்லையாகக் கூறினார். இவ்விரண்டினையுங் காலையே ஓதுவார்க்கு நல்வினையுண்டாமென்று கருதி இவற்றையே கூறினார். இவையிரண்டும் அகப்பாட்டெல்லையாயின*

என்று விளக்குகிறார். இளம்பூரணர் கூறுகின்ற வடதிசை - மங்கல திசை, குமரி - தீர்த்தம் முதலானவை சமணத்திற்கும் வைதிகத்திற்கும் பொதுவான புனிதக் கருத்துகளாகும். மேலும், நச்சினார்க்கினியர், *தென்புலத்தார்க்கு வேண்டுவன செய்வார் தெற்கும் மேற்கும் நோக்கியும் கருமங்கள் செய்வராதலின்* என்றும் வடவேங்கடம் திருமால் எனும் வைதிகக் கடவுளுக்குரியது என்பதை *நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகத் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும்* என்றும் கூறி, இவற்றை ஓதுபவர்க்கு நல்வினை உண்டாகுமென்று தமது வைதிகச் சிந்தனை மரபைத் தெளிவுபடுத்துகிறார்.

நில வரைவியல் அடிப்படையில் வடவேங்கடந் தென்குமரி என்று கூறிய தொல்காப்பிய அடிக்கு, வடக்கு மங்கல திசை என்பதால் தொல்காப்பியம் இத்திசையை முதலில் கூறியுள்ளது என்று இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகிய இருவரும் பதிவு செய்வதென்பது சமணத்திற்கும் வைதிகத்திற்குமான சமய நம்பிக்கைக் கருத்தியலாகக் கருதத்தக்கதாகும். அதுமட்டுமன்றி, இடைக்காலத் தமிழகத்தில் இருந்த வடதிசையின் உயர்வுச் சிந்தனையைக் காட்டுவதாகவும் அமைகிறது என்றும் குறிப்பிடலாம். சமணம், வைதிகம் ஆகிய இரண்டும் வடதிசையை உயர்வாகக் கூறுகின்றன என்றாலும் வைதிக மரபில் வந்த நச்சினார்க்கினியர் ஒருபடி மேலே சென்று வடவேங்கடம் நிலங்கடந்த நெடுமுடியண்ணலின் மலை (திருவிக்கிரமன் மலை) மலை என்று கூறுவதில்தான் இவரின் வைதிக அடையாளம் தெளிவாக வெளிப்படுகிறது.

**நல்லாசிரியர் - உயர்ந்தோர்**

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் வருகின்ற,

*ஆயிடைத்*
*தமிழ்கூறு நல்லுலகத்து* *(தொல்காப்பியம், சிறப்புப் பாயிரம், 2,3)*

என்ற அடிகள் குறித்து விளக்கவரும் இளம்பூரணர்,

*ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்தென்றது, அவ்வெல்லை தமிழ்கூறும் நல்லாசிரியரது என்றவாறு. நல்லாசிரியர் - அகத்தியனார் முதலாயினோர்*

என்று விளக்கம் எழுதுகிறார். இதற்கு நச்சினார்க்கினியர்,

*வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே*
*நிகழ்ச்சி யவர்கட் டாக லான* *(தொல்காப்பியம், மரபியல், 92)*

எனும் மரபியல் நூற்பாவைச் சான்று காட்டி,

*என மரபியலுட் கூறுதலின் அவ்வுயர்ந்தோராவார் அகத்தியனாரும் மார்க்கண்டெயருந் தலைச்சங்கத்தாரும் முதலாயினோர்*
என்று விளக்குகிறார்.

இளம்பூரணர் *நல்லாசிரியர்* என்று கூறியதை நச்சினார்க்கினியர் *உயர்ந்தோர்* என்று மாற்றுகிறார். மேலும், அகத்தியனார் முதலாயினோர் என்பதை அகத்தியனாரும், மார்க்கண்டேயரும், தலைச்சங்கத்தாரும் என்றும் மாற்றுகின்றார்.

தொல்காப்பியத்தின் முதல் உரைகாரரான இளம்பூரணர், நல்லாசிரியர் என்று கூறியதை நச்சினார்க்கினியர் உயர்ந்தோர் என மாற்றிய காரணம் குறித்த நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இடைக்காலத்தில் ஆசிரியர் உயர்ந்தோராகக் கருதப்பெற்ற அந்தணர்களாகவே பெரும்பாலும் இருந்திருக்க வேண்டும். தொல்காப்பிய உரையாசிரியர்களுள் இளம்பூரணர் தவிர்ந்த பிறர் வைதிக அந்தணர்களாக இருப்பதையும் இதற்குச் சான்றாகக் குறிக்கலாம். மேலும், *'இடைக்காலத் தமிழகத்தில் வேதக்கல்வி நிலையங்கள் மிகுந்திருந்தன என்பதும் வேதக்கல்வி நிலையங்கள் திறப்பதற்கான மானியங்கள் மன்னர்களிடமிருந்து பெறப்பட்டன என்பதும் வேதங்கள், சாத்திரங்கள், காப்பியங்கள், புராணங்கள் போன்றவை கற்பிக்கப்பட்டன'* (**செல்லம் வே.தி., *தமிழக வரலாறும் பண்பாடும்,*** 315) என்பதும் வரலாற்றாய்வாளர்கள் தரும் கருத்தாக அமைகிறது. இதன்வழி அந்தணர்களே பெரும்பாலும் ஆசிரியர்களாகவும் மாணவர்களாகவும் இருந்திருக்க வாய்ப்புகள் மிகுதி என்பது வெளிப்படை. இதுமட்டுமன்றி,

*கல்வி நிலையங்களில் வேதியர் குலத்து மாணவர்கள் மட்டும் இலவசமாக உண்டியும் உறையுளும் பெற்றுக் கற்றனர்*

*(செல்லம் வே.தி., தமிழக வரலாறும் பண்பாடும்,, 315)*

எனும் செய்தியும் இங்குக் குறிக்கத்தக்கதாக அமைகிறது.

இதனால், பாரத்துவாச கோத்திர அந்தண மரபில் வந்த ஆசிரியரான நச்சினார்க்கினியர் நல்லாசிரியர் என்பதை உயர்ந்தோர் என்று மாற்றுகிறார் எனலாம். மேலும், புராண வழிப்பட்ட மார்க்கண்டேயர் கதையின் அடிப்படையில், மார்க்கண்டேயர் சிரஞ்சீவி எனும் பௌராணிகக் கருத்தியலைக் கவனத்தில் கொண்டு மார்க்கண்டேயரையும் இணைந்துள்ளார் என்றும் குறிக்கலாம்.

இந்நிலையில், நச்சினார்க்கினியர் தாம் சார்ந்திருக்கின்ற வைதிகச் சிந்தனை மரபின் அடிப்படையிலான புராண இதிகாசத் தன்மையையும் அக்கால வழக்கிலிருந்த ஆசிரியரானவர் உயர்ந்தோராகக் கருதப்பெற்ற அந்தணரேயாவர் எனும் சிந்தனை அடிப்படையிலும் நல்லாசிரியர் என்பவர் உயர்ந்தோராகக் கருதப்பெற்ற அந்தணர் என்பதைத் தெளிவுபடுத்தித் தமது வைதிக அடிடையாளத்தை நிலை நாட்டுகிறார் என்பது தெளிவாகிறது.

**வீடுபேற்றுச் சிந்தனை மரபு**

இன்பம், பொருள், அறம் என்பது தமிழ் மரபு. இதனை,

*இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்*

*(தொல்காப்பியம் பொருளதிகாரம், 89:1,2)*

என்ற தொல்காப்பிய நூற்பாவும் தெளிவுபடுத்தும். காலப்போக்கில் *இன்பம், பொருள், அறம்* என்பது *அறம், பொருள், இன்பமாக* மாறுகிறது. இதைத்தான் திருக்குறள், நாலடியாரின் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற அதிகார வைப்பு முறைகள் தெளிவுபடுத்துகின்றன.

வீடுபேறு எனும் கருத்தியல் தொன்மைத் தமிழ் இலக்கண, இலக்கிய மரபுக்கு அப்பாற்பட்டது. இந்நெறி, இடைக்காலத் தமிழ் இலக்கண, இலக்கிய மரபில் திணிக்கப்பெற்று வளர்ந்துள்ளது. அதனால்தான்,

*அறம்பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே*

*(நன்னூல், பொதுப்பாயிரம், 10)*

எனும் இலக்கணக் கருத்தியலும் உருவாகிறது.

வீடுபேற்றுச் சிந்தனை மரபு சமணத்திற்கு உரியது. இதனால்தான் நன்னூலார் தாம் உருவாக்கிய இலக்கணத்தில் இக்கருத்தியலைச் சேர்க்கிறார். இருப்பினும், நன்னூலாருக்கும் முன்னோடியாக இருந்த, சமணப் பின்புலத்திலிருந்து வந்த இளம்பூரணர் இக்கருத்தியலைத் தம் உரையில் திணிக்கவில்லை என்பது இளம்பூரணரின் சிறப்பை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

சமணத்திலிருந்து வைதிகம் கடன் வாங்கிக் கொண்ட கொள்கைகளுள் முக்கியமானது வீடுபேற்றுக் கொள்ளை. இந்த வீடுபேற்றுக் கொள்கைக் கருத்தியலை நச்சினார்க்கினியர், தொல்காப்பியச் சிறப்புப்பாயிர விருத்தியில் பதிவு செய்கிறார். சிறப்புப்பாயிரத்தில் இவ்வீடுபேற்றுக் குறிப்பு இடம்பெறாத போதிலும் வலிந்து எழுதுகிறார். அக்கருத்து வருமாறு:

*வீடு கூறாரோவெனின், அகத்தியனாருந் தொல்காப்பியனாரும் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறுதலின்றி வீட்டின் தன்மை இலக்கணத்தாற் கூறாரென்றுணர்க. அஃது,*

*அந்நிலை மருங்கி னறமுத லாகிய*
*மும்முதற் பொருட்கு முரிய வென்ப*
*(தொல்காப்பியம், செய்யுளியல், 106)*

*என்பதனான் உணர்க. இக்கருத்தானே வள்ளுவனாரும் முப்பாலாகக் கூறி மெய்யுணர்தலான் வீடுபேற்றிற்கு நிமித்தங் கூறினார்.*

தொல்காப்பியத்திலும் வள்ளுவத்திலும் தனித்துக் கூறப்பெறாத வீடுபேற்றுக் கருத்தியலை நச்சினார்க்கினியர் வலிந்திழுந்து *அதற்குரிய நிமித்தத்தை இவர்கள் கூறினர்* என்று கூறுவது முற்றிலும் பொருத்தமற்றதாகும். அறம், பொருள், இன்பம், வீடு எனும் சமணத்திலிருந்து கடன் வாங்கப்பெற்ற வைதிகக் கருத்தியலை உள்வாங்கிய நச்சினார்க்கினியரால், தொல்காப்பியத்திலும் வள்ளுவத்திலும் வீடுபேற்றுக் கருத்தியல் தனிப்பகுப்பாக இல்லாமையை ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இதனால், இவ்வீடுபேற்றுக் கருத்தியலை வலிந்து எடுத்து வந்து, *தொல்காப்பியமும் திருக்குறளும் வீடுபேற்றிற்குரிய நிமித்தத்தைக் கூறுகிறது* எனறு பதிவு செய்கிறார். ஆனால், நச்சினார்க்கினியருக்கு முன்பே உரை எழுதிய இளம்பூரணர், வீடுபேற்றுக் கருத்தியல் தாம் சார்ந்திருந்த சமணத்திற்கு உரியது என்றாலும் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையில் அவர் திணிக்கவில்லை என்பது இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

**முந்துநூல் கருத்துகள்**

தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில்,
*முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணி*
*(தொல்காப்பியம். சிறப்புப்பாயிரம், 7)*
எனும் அடி வருகிறது. இதற்கு உரை எழுதும் இளம்பூரணர்,

*முதல் நூல்களிற் சொன்னவற்றினைக் கண்டு அவ்விலக்கணம் முறைப்பட ஆராய்ந்து*
என்று உரை எழுதி,
*அம்முந்து நூல்களில் ஒன்றற்குரிய இலக்கணத்தினை ஒன்றன் இலக்கணத்தோடு ஆராய்ந்தாற்போல ஆராயாது முறைப்பட ஆராய்ந்து என்றவாறு*
என விளக்கம் எழுதுகிறார். நச்சினார்க்கினியர்,

*முந்துநூல் அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசை நுணுக்கமும். அவற்றுட்கூறிய இலக்கணங்களாவன எழுத்துச் சொற் பொருள் யாப்பும் சந்தமும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பனவியலுஞ் சோதிடமும் காந்தருவமுங் கூத்தும் பிறவுமாம்*
என்று விளக்கம் எழுதுகிறார்.

தொல்காப்பியத்திற்கு முன்னர் வேறுசில இலக்கண, இலக்கிய நூல்கள் இருந்திருக்கலாம் என்றாலும் இன்றுவரை நமக்குக் கிடைக்கவில்லை. இந்நிலையில், தம்கால வழக்காறுகளையும் தமக்கு முன்னர்த் தோன்றிய நூல்களையும் உள்வாங்கியே தொல்காப்பியம் உருவாகியுள்ளது என்பதைத் தொல்காப்பியத்தின் பதிவுகள் நமக்குத் தெளிவுபடுத்துகின்றன. தொல்காப்பியத்தில் வருகின்ற *என்ப, மொழிப, கூறுப* என்று வரும் பதிவுகள் தம் சமகால வழக்காற்றுப் பயன்பாடுகளையும் *என்மனார் புலவர், யாப்பறிந்திசி னோரே, நூலறி புலவர்* என்று வரும் பதிவுகள் தமக்கு முன்னர் தோன்றிய நூல் பயன்பாடுகளையும் தெளிவுபடுத்துவனவாக அமைகின்றன.

இச்சூழலில், தொல்காப்பியம் அகத்தியம் முதலான நூல்களைக் கொண்டு உருவானது என்று குறிப்பது பொருத்தமற்றதாகும். மேலும், அகத்தியம் இன்றுவரைக் கிடைக்கப்பெறவில்லை என்பதும் உரையாசிரியர்கள் உரைமேற்கோளாகப் பதிவு செய்யப்பெற்றிருக்கின்ற ஒருசில சூத்திரங்களே கிடைத்திருக்கின்றன என்பதும் இங்குக் குறிக்கத்தக்கதாகும். அகத்தியம் குறித்த தெளிவே ஏற்படாத இச்சூழலில், மாபுராணம், பூதபுராணம் முதலிய புராண நூல்களோடு இசை நுணுக்கத்தையும் தொல்காப்பியத்திற்கு முந்துநூலாகக் குறிப்பிடும் நச்சினார்க்கினியர், அந்நூல்களின் வரிசையில் பார்ப்பனவியல், சோதிடவியல், காந்தருவ இயல் என்று வைதிகச் சிந்தனை மரபோடு கலந்த நூல்களையும் பதிவு செய்கிறார். இத்தன்மை, வைதிகச் சிந்தனை மரபைத் தமிழ் இலக்கண மரபிற்குள் திணித்துவிட வேண்டும் என்று கருதிய நச்சினார்கினியரின் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகிறது எனலாம்.

*மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள்*
*(தொல்காப்பியம் பொருளதிகாரம், 89:4)*
என்று கந்தருவ வழக்கத்தையே மறையோர் தேயத்திற்குரியது என்று தொல்காப்பியம் கருதும் சூழலில், தொல்காப்பியத்திற்கு முந்தைய மரபுக் கருத்தியலாகப் பார்ப்பனவியல், சோதிடவியல், காந்தருவ இயல் ஆகியன இருந்தன என்று நச்சினார்க்கினியர் கூறுவதும் மாபுராணம், பூதபுராணம் முதலான புராண நூல்கள் இருந்ததாகக் கூறுவதும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. மாறாக, நச்சினார்க்கினியரின் வைதிகக் கருத்தாக்கத்தையே இது வெளிப்படுத்துகிறது.

தமிழ்ச் சமூகத்தில் சமணம் செல்வாக்குப் பெற்ற காலத்திற்குப் பின்னர்தான் புராணம் என்ற சொல்லாடலும் அதையொட்டிய புராண நூல்களும் உருவாகின. கி.பி. 6ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு

வைதிகம் அந்தப் புராணச் சொல்லாடலைத் தனதாக்கிக் கொண்டு புராண நூல்கள் பலவற்றை உருவாக்கித் தமிழ்ச் சமூக வழக்காற்றில் புழக்கத்திற்குக் கொண்டு வருகிறது. இத்தகைய இடைக்கால வழக்கைத் தொல்காக்பியப் பாயிர வழக்கோடு கலந்து, வலிந்து உரை கூறுவதற்கு நச்சினார்க்கினியர் உணர்வில் கலந்திருந்த வைதிகச் சிந்தனை மரபே காரணமாகும். அதேவேளை, தொல்காப்பிய முதல் உரைகாரரான இளம்பூரணர் இத்தகைய முரண்பட்ட பதிவேதும் செய்யவில்லை என்பதும் இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

**புராணக்கதை மீள்நினைவூட்டல்**

நச்சினார்க்கினியர் சிறந்த கதைசொல்லி ஆவார். தமது உரைகள் அனைத்திலும் கதை கூறும் திறத்தை மிகச்சிறப்பாகக் கையாண்டு விளக்கமளிப்பதில் வல்லவராகத் திகழ்கிறார். தொல்காப்பிச் சிறப்புப்பாயிரத்தில் வருகின்ற,

*வடவேங்கடந் தென்குமரி*
*ஆயிடைத்*
*தமிழ்கூறு நல்லுலகத்து* *(தொல்காப்பியம், சிறப்புப்பாயிரம், 1-3)*

எனும் அடிகளில் காணலாகும் தமிழகத்தின் வடக்கு எல்லையாகிய வடவேங்கடம் பற்றிக் கூறவரும் நச்சினார்க்கினியர்,

*நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி உலகந் தவஞ்செய்து வீடுபெற்ற மலையாதலானும்...*

என்று குறிப்பிடுகிறார். இதேபோல் நச்சினார்க்கினியர் உருவாக்கிய புனைவுக்கதையில் அகத்தியர் வடதிசையிலிருந்து தென்திசை சென்றபோது,

*துவாரபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு...*

*(கணேசையர் சி. (பதி.), இ.ப.), தொல்காப்பியம் - எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், பக்கம் 110)*

என்று எழுதுகிறார். தொல்காப்பியத்தின் வழி *மாயோன்* என்றோ, வழக்கியல் அடிப்படையில் *திருமால்* என்றோ கூறாமல் '*நிலங்கடந்த நெடுமுடியண்ணல்*' என்று கூறுவதற்கான காரணத்தை நாம் உற்றுநோக்க வேண்டியுள்ளது.

திருமால் எடுத்த பத்து அவதாரங்களைத் தெளிவுபடுத்தும் கதைகளுள் ஒன்று வாமன அவதாரக்கதை. இக்கதை, *மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண்கேட்க வாமனனாக மாறி வந்த திருமால், மூன்றடி மண் அளித்தவுடன் திருவிக்கிரமனாக மாறி உலகங்கள் அனைத்தையும் ஈரடியால் அளந்து, மூன்றாம் அடிக்கு மீண்டும் வாமனனாக மாறி மாபலியின் தலையில் வைத்தான்*'என்று கூறுகிறது. வைதிக மரபை உயர்த்திப் பிடிக்கின்ற இந்த வாமன அவதாரக் கதையை மீள்நினைவூட்டுவதற்காகவே நச்சினார்க்கினியர் *நிலங்கடந்த நெடுமுடியண்ணல்* என்று கூறுகிறார்.

'இடைக்காலத்தில் படித்தவர்களாகவும், ஆச்சாரியர்களாகவும் இருந்தவர்கள் வைதிகர்கள் ஆவர். கல்வியறிவு நிறைந்தவர்களாகத் திகழ்ந்த வைதிகர்கள், இதுபோன்ற கதைகளை மீள்நினைவூட்டுவதன் மூலம், தாம் எழுதிய இந்த உரையை மிகுந்த விருப்பத்துடன் படிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது' என்ற சிந்தனையின் அடிப்படையிலேயே நச்சினார்க்கினியர் இதுபோன்ற வைதிகக் கதைகளை மீள் நினைவூட்ட முயற்சித்திருக்க வேண்டும். அதனாலேயே, *மாயோன், திருமால், வேங்கடவன்* என்று கூறாமல் *நிலங்கடந்த நெடுமுடியண்ணல்* என்று கூறுகிறார் எனக் குறிக்கத் தோன்றுகிறது.

**வைதிகப் புனைவுக்கதை உருவாக்குதல்**

நச்சினார்க்கினியர், ஏற்கனவே வழக்கில் இருக்கின்ற புராணக்கதைகளைக் கூறி, தமது அடையாளத்தை நிலைநாட்டி விளக்குதல் மட்டுமன்றி, புதிதாகக் கதைகளைப் புனைவதிலும் வல்லவராகத் திகழ்கிறார். இவர் கட்டமைக்கும் கதைகள் வைதிகச் சிந்தனைப் பின்புலத்தை உயர்த்திப் பிடிக்கும் நிலையிலேயே அமைகின்றன. இந்தப் புனைவுக்கதை மரபைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரையிலேயே தொடங்கிவிடுகிறார். அக்கதை வருமாறு:

*அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' வென்று கூறுதலானும் தொல்காப்பியனாரும் பலகாலுஞ்சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங் கூறிவிடுவதெனக் கருதி அவர் கூறிய கடாவிற்கெல்லாம் விடை கூறுதலின் 'அரிறபத் தெரிந்து' என்றார். அவர் கேளன்மினென்றதற்குக் காரண மென்னையெனின், தேவரெல்லாருங்கூடி யாஞ் சேரவிருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது; இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற் குரியரென்று அவரை வேண்டிக்கொள்ள, அவருந் தென்றிசைக்கட் போதுகின்றவர் கங்கையாருழைச்சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச்சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப், பெயர்ந்து, துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண்கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையுங் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கணிருந்து, இராவணனைக்*

*கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரண தூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, 'நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக' வெனக்கூற, அவரும் எம் பெருமாட்டியை எங்ஙனங் கொண்டு வருவலென்றார்க்கு 'முன்னாகப் பின்னாக நாற்கோல்நீளம் அகலநின்று கொண்டுவருக' வென அவரும் அங்ஙனங் கொண்டு வருவழி, வையை நீர்கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டுபோகத், தொல்காப்பியனார் கட்டளையிறந்துசென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட, அதுபற்றி யேறினார்; அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும் தொல்காப்பியனாரையுஞ் 'சுவர்க்கம் புகாப்பீர்' எனச் சபித்தார்; 'யாங்கள் ஒரு குற்றமுஞ் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானுஞ் சுவர்க்கம் புகாப்பீர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் அவன் செய்த நூலைக் கேளற்க வென்றாரென்க*

*(கணேசையர் சி. (பதி.), (இ.ப.), தொல்காப்பியம் - எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும், பக்கம் 11).*

தொல்காப்பியரைச் *சமதக்னி முனிவரின் மகனான திரணதூமாக்கினி* எனும் பெயருடையவர் என்று கூறி, சிவபெருமான், நிலங்கடந்த நெடிமுடியண்ணலாகிய திருமால், உலோபமுத்திரையார் என்ற குமரியார், அகத்தியர் ஆகியோரோடு இணைத்து, வைதிக மரபிற்குட்பட்டவராக்க நச்சினார்க்கினியர் மிகப்பெரும் முயற்சி எடுத்திருக்கின்றார் என்பதை இக்கதை தெளிவுபடுத்துகிறது.

சிவஞான முனிவர் இந்தக் கதை எந்தப் புராணத்திலும் இல்லாதிருப்பதைக் கண்டு, இது நச்சினார்க்கினியரின் சொந்தக் கதை என்று கூறி, இக்கதையை மறுக்கிறார் என்று உரை ஆய்வாளர் மு.வை.அரவிந்தன் கூறுகிறார். அவர் கருத்து வருமாறு:

*அகத்தியரோடு முரணிச் சபித்தாராயின் அவ்வாறு ஓர் ஆசிரியரும் கூறாமையானும், அது வேத வழக்கோடும் ஆன்றோர் வழக்கோடும் மாறுகொள்வார் கூற்றேயாம் என மறுக்க* (அரவிந்தன் மு.வை., (பதிப்பாசிரியர்), *உரையாசிரியர்கள், பக்கம் 253).*

வைதிகரான நச்சினார்க்கினியர் உருவாக்கிய இக்கதையை மற்றொரு வைதிகரான மாதவச் சிவஞான முனிவராலேயே ஏற்க முடியவில்லை என்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாக அமைகிறது.

தாம் சொல்லவரும் கருத்திற்கு வலுச்சேர்ப்பதாக அமையும் எந்த ஒன்றையும் தாமே உருவாக்கும் திறம் படைத்தவராக நச்சினார்க்கினியர் விளங்கியுள்ளார் என்பதற்கு இந்தக்கதை ஒன்றே சான்று பகரக்கூடியதாகும். இத்தகைய புனைவுக்கதை ஏதும் இளம்பூரணத்தில் இல்லை என்பதும் இங்குக் குறிக்கத்தக்கதாகும்.

**வைதிக, அவைதிக மீக்கோட்பாட்டுக் கருத்தியல்**

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் எழுந்த பனுவல்கள் அனைத்தும் ஏதோவொரு சிந்தனைப் பின்புலத்தை மையமாகக் கொண்டே தோன்றியிருக்கின்றன. தமிழ் இலக்கிய, இலக்கண, உரை வரலாறுகளோடு தமிழ்ச் சமூக வரலாற்றையும் இணைத்துப் பார்க்கும்போது இத்தன்மை தெளிவாகப் புலப்படும். தமிழ்ச் சூழலைப் பொறுத்தவரை வைதிகம் X அவைதிகம் எனும் தன்மை ஒவ்வொரு காலத்திலும் இணையெதிர்வுகளாகச் செயல்பட்டுள்ளன. இதற்கான காரணங்களைத் தெளிவாகக் கூற இயலாவிட்டாலும் கருத்தியல் அடிப்படையிலான வளர்ச்சி நிலைகளையும் கருத்தியல் பரவலாக்க நிலைகளையும் அடிப்படையாகக் கொண்டே இத்தகு தன்மை தொழிற்பட்டுள்ளது எனக் குறிக்கலாம். இத்தன்மையைப் பழந்தமிழ் உரைகளிலும் காணமுடிகிறது.

*வரலாற்று நோக்கிலும் தமிழர் பண்பாடு மற்றும் மொழி வளர்ச்சி வைதிக - அவைதிக இணையெதிர்வு நிலைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது குறிப்பிடத்தக்கது*

*(*அரவிந்தன் மு.வை., (பதிப்பாசிரியர்), *உரையாசிரியர்கள், பக்கம் 319*)

என்ற கருத்தும் இங்குக் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். மீக்கோட்பாட்டுக் கருத்தியல் வாய்பாடுகளாக,

*வரலாற்று நிலை - சமகால நிலை, வைதிகம் - அவைதிகம், ஒப்புமையாக்கத்தின் வழி மொழி கற்றல், பகுத்தறிவுவாதம் - அனுபவவாதம், மொழி வழக்கும் செய்யுளுமாறும், மொழி ஓர் அமைப்பொழுங்கு, விதிமுறை - விளக்கமுறை, கற்றல் / கற்பித்தல் பாங்கு, மொழித்திருத்தமும் மொழித்தூய்மை காத்தலும், முழுமையான மொழி விளக்கமின்மை*

*(*அரவிந்தன் மு.வை., (பதிப்பாசிரியர்), *உரையாசிரியர்கள், பக்கம்* 304)

எனப் பலநிலைகள் இருந்தாலும் வைதிக - அவைதிகச் சிந்தனைக் கருத்தாக்கம் என்பது மிக முக்கியமானதாக அமைகிறது. சில நேரங்களில் சமயச் சிந்தனைக் கருத்தாக்கமானது அப்பனுவலின் மைய நீரோட்டமாக அமைந்து விடுவதும் உண்டு. தொல்காப்பிய உரைகளைப் பொறுத்தவரை வைதிக - அவைதிகம், கற்றல் - கற்பித்தல் எனும் இரு கருத்தியல்களும் ஒரே நேர்க்கோட்டில் பயணிப்பதை அறியமுடிகிறது. இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாக உள்ளன என்றும் இதனைக் குறிப்பிடலாம். இத்தன்மைகளைத் தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைகளும் தெளிவுபடுத்துகின்றன.

தொல்காப்பியத்திற்கு முதற்கண் உரை எழுதிய உரையாசிரியரான இளம்பூரணர் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் இல்லாத எந்தக் கருத்தையும் தம் உரையில் பதிவு செய்யவில்லை. சிறப்புப்பாயிர உரையைப் பொருத்தவரை இளம்பூரணர் கூடுதலாகக் கூறிய கருத்து என்பது, *மங்கலதிசையாகலின் வடக்கு முன் கூறப்பட்டது* என்பதும் *நான்கு வேதம்* என்பதும் ஆகும். சிறப்புப்

பாயிரத்தில் *வடவேங்கடம் தென்குமரி* என்று வருவதாலும் *நான்மறை முற்றிய* எனும் பதிவு காணப்பெறுவதினாலுமே இளம்பூரணர் மேற்கண்ட பதிவுகளைச் செய்துள்ளார் என்று குறிக்கத்தோன்றுகிறது. மாறாக வலிந்து கூறுவதை அவர் உரையில் காண இயலவில்லை.

மேலும், தனித்த ஒரு திசையை மங்கலமாகக் கூறுவதும் வேதக்கருத்தை உயர்த்துவதும் வைதிகச் சிந்தாந்த மரபு என்றாலும், அச்சொற்கள் மூலத்தில் பயின்று வந்திருக்கின்ற காரணத்தால் இளம்பூரணர் அதற்கு அப்படியே பொருள் கூறுகிறார். இது, இளம்பூரணரின் நேர்மையையும் அறிவு ஓர்மையையும் காட்டுகிறது எனக் குறிக்கலாம். மூலத்தைச் சிதைப்பதையோ தம் கருத்தியலுக்கு ஏற்றபடி மூலத்தை வலிந்து மாற்றுவதையோ அவைதிகவாதியான இளம்பூரணரிடம் காண இயலவில்லை.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியச் சிறப்புப்பாயிரத்தில் இருக்கின்ற கருத்துகளுக்கு மிகை விளக்கம் அளிக்கிறார். அது ஒரு உரையாசிரியருக்குரிய உரிமை என்றாலும், தம் கருத்தியலை மட்டும் மையமாகக் கொண்டு விளக்கும்போதுதான் அவரது தற்சார்புத் தன்மை வெளிப்படுகிறது எனலாம். மேலும், தாம் சார்ந்திருக்கின்ற கருத்தியலை மையப்படுத்திய பதிவுகளையும் வருவித்துப் பதிவு செய்கிறார். அவற்றுள்ளும், *நல்லாசிரியரை உயர்ந்தோர் என மாற்றுதல், வீடுபேற்றுச் சிந்தனை, முந்துநூல் கருத்துகள், வைதிகப் புனைவுக்கதை உருவாக்குதல்* ஆகியன உச்சகட்ட வைதிகப் பதிவுகளாகக் கருதத்தக்கனவாகும். இவை, தாம் சார்ந்திருக்கின்ற வைதிகச் சித்தாந்தத்தைப் பரவலாக்கம் செய்யவல்லன என்பதைக் கருத்தில் கொண்டே நச்சினார்க்கினியர் இப்பதிவுகளையும் புனைவுகளையும் உருவாக்கியுள்ளார் என்று குறிக்கத் தோன்றுகிறது. தாம் சார்ந்திருக்கின்ற வைதிகக் கருத்தியலை எவ்வழியிலாயினும் பதிவிட வேண்டும் என்கிற சிந்தனை நச்சினார்க்கினியரின் ஆழ்மனப்பதிவோ எனும் ஐயம்கூட நமக்கு ஏற்படுகின்றது.

அவர் ஒரு வைதிக ஆசிரியர் என்பதாலும் அவரிடம் பாடம் கற்றவர்கள் வைதிகர்களாக மட்டுமே இருந்திருக்க வேண்டும் என்பதாலும் இத்தகைய வைதிகக் கருத்தியல் பதிவுகளைத் தம் உரையில் பதிவு செய்துள்ளார் என்று குறிக்கலாம். மேலும், தொல்காப்பியத்திற்கு வைதிக அடையாளம் காட்ட நச்சினார்க்கினியர் பெருமுயற்சி எடுத்துள்ளார் என்ற சிந்தனையும் எழுகிறது. இத்தன்மையை, வைதிகச் சிந்தனைப் பள்ளியின் செயல்பாடு என்றும் கருதலாம். ஆனால், சமணச் சிந்தனைப் பள்ளியினரான இளம்பூரணரிடம் இத்தன்மையைக் காண இயலவில்லை.

ஓர் இலக்கணப் பனுவலுக்கு உரை எழுதும்போது அதன் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துவதில்தான் தம் கவனம் இருக்கவேண்டும் என்பதில் அவைதிகம் உறுதியாக இருந்துள்ளது. இலக்கணம் என்பது வேறு; தம் சமயச் சிந்தனை என்பது வேறு எனும் கருத்தில் அவைதிகம் தெளிவாக இருந்துள்ளது. ஆனால், வைதிகம் இலக்கணமாக இருந்தாலும் தம் சமயக் கருத்தியலை அதற்குள் கொண்டு வருவதற்குப் பெருமுயற்சி எடுத்துள்ளது. ஒருவேளை, தம் சிந்தனைப் பள்ளியில் பயின்ற வைதிக மாணவர்களுக்கு, வைதிகக் கருத்தியலின் வழி இலக்கணத்தைப் புரியவைக்கப் பெருமுயற்சி எடுக்கவேண்டிய சூழலுக்கு வைதிகச் சிந்தனைப் பள்ளிகள் தள்ளப்பட்டிருக்குமோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது. இங்குதான் அவைதிகத்தின் மேன்மையும் வைதிகத்தின் சமயப் பரவலாக்கத் தன்மையும் வெளிப்படுகிறது எனலாம்.

> *தமிழ் இலக்கண மரபில் அகத்தியரைத் தொல்காப்பியரோடு தொடர்புபடுத்திய காலத்திலேயே இலக்கண உருவாக்கத்தில் வைதிக - அவைதிகச் சார்பு சிலாகிக்கப்பட்டது என்று கூறலாம். வைதிகச் சார்புடையோர் தொல்காப்பியரை அகத்தியரின் மாணாக்கர் என்று கூறினர். இக்கருத்துக்கு உடன்பட்டோரை நான்கு வருணத்தோடு பட்ட சான்றோர் என்று கூறினர். வைதிகப் பண்பாட்டுக்கும் சமயத்திற்கும் தொல்காப்பியம் போன்ற சிறந்த இலக்கணத்தின் வழிப் பெருமை சேர்க்க வைதிகர் மேற்கொண்ட முயற்சியே இது எனக் குறிப்பிடுவர் சிலர்*
> (அரவிந்தன் மு.வை., (பதிப்பாசிரியர்), *உரையாசிரியர்கள், பக்கம் 321)*

என்கிறார் சு. இராசாராம். இக்கருத்து, வைதிகச் சிந்தனை மரபு ஓர் இலக்கணப் பனுவலை எவ்வாறு தனக்குரிய அடையாளமாக மாற்றப் பாடுபட்டிருக்கிறது என்பதனை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இத்தகு தன்மை, தமிழ் இலக்கண உருவாக்கம் - இலக்கணங்களுக்கான உரை உருவாக்கம் ஆகிய இரண்டு நிலைகளிலும் தொழிற்பட்டுள்ளது.

அதனால்தான், தொல்காப்பியம் எனும் இலக்கணப் பனுவலுக்கு உரை எழுதினாலும் நச்சினார்க்கினியர் எனும் வைதிகரால் தமது அடையாளத்தை இழந்து, முழுமையான இலக்கணவாதியாக மட்டும் அவரால் பயணிக்க இயலவில்லை. அதேவேளை, தொல்காப்பியம் எனும் தொல் தமிழ் இலக்கணப் பனுவலை வைதிக அடையாள மரபிற்குள் கொண்டுவரும் முயற்சியிலும் ஈடுபடுகிறார். இம்முயற்சி சேனாவரையரிலிருந்தே தொடங்கினாலும் நச்சினர்க்கினியரால் உச்சத்தை அடைகிறது. இளம்பூரணர், இவ்வாறு செயல்படவில்லை என்பது அவைதிகச் சிந்தனைப் பள்ளியின் மேன்மையைக் காட்டுவதாக அமைகிறது.

**துணை நின்றவை**


- அரவிந்தன் மு.வை., 2010 (மூ.ப.), *உரையாசிரியர்கள்,* பாரிமுனை, சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

- அறவேந்தன் இரா. & லோகேஸ்வரன் ம. (பதி.), 2017, *தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - நச்சினார்க்கினியர் உரை,* சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- இராசாரம் சு., 2010, *இலக்கணவியல் - மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்,* நாகர்கோவில் : காலச்சுவடு பதிப்பகம்.
- இளவரசு சோம., 2009 (நா.ப.), *நன்னூல் - எழுத்ததிகாரம்,* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
- கணேசையர் சி. (பதி.), 2007 (இ.ப.), *தொல்காப்பியம் - எழுத்ததிகார மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும்,* சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
- கோபாலையர் தி.வே. & அரணமுறுவல் ந. (பதி.), 2003, *தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் - இளம்பூரணம்,* சென்னை : தமிழ்மண் பதிப்பகம்.
- ..., 2003, *தொல்காப்பியம் - பொருளதிகாரம் - இளம்பூரணம் - 1,* சென்னை : தமிழ்மண் பதிப்பகம்.
- சத்தியராஜ் த. (பதி.), 2018, *மீக்கோட்பாடு (தொல்காப்பிய மூலமும் உரைகளும்),* கோயமுத்தூர் : இனம் பதிப்பகம்.
- சதீஷ் அ., 2008, *சங்க இலக்கிய உரைகள் - பழந்தமிழ்க் கவிதைகளின் இடைக்கால வாசிப்பு முறைகள்,* திருச்சி : அடையாளம்.
- சாமிநாதையர் உ.வே. (பதி.), 1956 (ஐ.ப.), *பத்துப்பாட்டு மூலமும் மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் உரையும்,* சென்னை : கபீர் அச்சுக்கூடம்.
- செல்லம் வே.தி., 2009, *தமிழக வரலாறும் பண்பாடும்,* சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
- மோகன் இரா. & சொக்கலிங்கம் நெல்லை ந., 2003, *உரை மரபுகள்,* சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.

## TOLKAPPIYA SPECIALTY TEXTS: VAIDIKA, AVIDIKA METAPHYSICAL PERSPECTIVE

**M. Paramasivan**

Ilampuranar and Naccinarkkiniyar are the writers of the text for the Tolkappiya special period, which is considered to be the restoration period of the ancient Tamil texts. This article sets out to explore the mythological theories of the two archaeologists. Senavarayar, Perasiriyar and Naccinarkkiniyar who wrote the text following him, seems to have excelled in this but also focused on recording his religious thoughts in between the writings. Wherever it is possible to record the views of the Vedic religious thought on which you belong, post your religious thoughts on the respective places. Among these, Naccinarkkiniyar is the author of the text for the special crop. He begins to record his ideology of religious identity in a special crop discourse. In this context, the ideology of Vedic and non-Vedic thought expressed in the Tolkappiya special text can be analyzed as follows. They are:
1. Scriptural commentary
2. Directional ideology
3. Good writers and high achievers
4. Traditional expression of homeopathic thinking
5. Preface Comments
6. Legendary recollection
7. Creating Vedic mythology.